# தமிழ்நாடு அரசு
# நீர்வளத்துறை

93
29/11/2024

சி.தி. உபகோட்டம் எண்: 2 மூலைக்கரைப்பட்டி
உ.செ.பொ.
உதவியாளர் 29/11/2024

குரோதி, ~~கார்த்திகை~~ – 11
திருவள்ளுவர் ஆண்டு 2055

**செயற்பொறியாளர் நீ.வ.து., சிறப்பு திட்டக்கோட்டம், அம்பாசமுத்திரம் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**முன்னிலை: பொறி.சி.பழனிவேல், பி.இ.,**
**செயற்பொறியாளர், நீ.வ.து.(கூ.பொ.),**

**செயல்முறை ஆணை எண்: இ1/ 09 (1044) /2024/நாள்: 26-11-2024**

**பொருள்:** பணியமைப்பு - த.நா.அ.ப.தொகுதி - திரு.மா.கணேஷ் முருகன், இளநிலை உதவியாளர் - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து மற்றும் தகுதிகாண் பருவம் தொடங்கி ஆணை வழங்குதல் - குறித்து.

**பார்வை:**
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை, கடித எண்: 1970/PSD.D2/2023/நாள்:31.08.2023.
2. முதன்மைதலைமைப்பொறியாளர் மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) நீர்வளத்துறை, சென்னை அவர்களின் செயல்முறை எண். எஸ்.3(3)/35336/2023/நாள். 22.09.2023
3. தலைமைப் பொறியாளர் நீ.வ.து , மதுரை மண்டலம் , மதுரை அவர்களின் செயல்முறை ஆணை எண்:அ1/11058-2/2023/ நாள்:03.10.2023.
4. சிறப்பு தலைமைப் பொறியாளர், நீ.வ.து., திட்டங்கள் வட்டம், திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணை எண் ப2/2173/2023/நப (1)வ/நாள்:05.10.2023.
5. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். இ1/07(1011)/2023/ நாள் : 09-10-2023.
6. உதவிசெயற்பொறியாளர், நீவது., சிறப்பு திட்ட உபகோட்ட எண்:2, மூலைக்கரைப்பட்டி அவர்களின் க.எண்: கோ-07/2024/உசெபொ-2/ நாள்: 18.10.2024.

******

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட ஆண்டிற்கான ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தேர்வுதொகுதி 4-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, நீர்வளத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பின்னர் பார்வை எண் (2) இல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர் மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) நீர்வளத்துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின் வாயிலாக பணிநியமனம் செய்யப்பட்டது. பின்னர், பார்வை (3)இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின் வாயிலாக மறுபணியமர்வாணை வழங்கப்பட்டு திரு.மா.கணேஷ் முருகன் இளநிலை உதவியாளராக 09-10-2023 முப முதல் இக்கோட்ட அலுவலகத்தின் கீழ் இயங்கும் மூலைக்கரைப்பட்டி, சிறப்பு திட்ட உப கோட்ட எண் -2 அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

த.பி.பா/

திரு.மா.கணேஷ் முருகன், இளநிலை உதவியாளரின் பணி, அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணிமேற்கொண்ட நாளான 09.10.2023 முப முதல் தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 14/2016, விதி 28 (1) - ன் படி வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேலும், தனியரின் தகுதிகாண் பருவம் மூன்றாண்டு தொடர்பணியில் இரண்டாண்டுகள் பணிக்காலமாக நிர்ணயித்து, 09.10.2023 முற்பகல் முதல் தகுதிகாண் பருவம் தொடங்குவதாகவும், இந்த தகுதிகாண் பருவகாலத்தில் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்பெறும் இளநிலை உதவியாளர் / உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெறவேண்டும் எனவும் ஆணை வழங்கப்படுகிறது.

இவ்வாணை, சென்னை உயர்நீதிமன்றம் சென்னை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தேர்வுத் தொகுதி -IV -ன் தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுகிறது

ஓம்/- (பொறி.சி.பழனிவேல்)
செயற்பொறியாளர், நீ.வ.து.,
சிறப்பு திட்டக்கோட்டம்,
அம்பாசமுத்திரம்.

பெறுநர்

திரு.மா.கணேஷ் முருகன்,
இளநிலை உதவியாளர்,
(வழி) உதவிசெயற்பொறியாளர், நீ.வ.து.,
சிறப்புதிட்ட உபகோட்டம் எண்:2,
மூலைக்கரைப்பட்டி -627 354.

நகல்: உதவிசெயற்பொறியாளர், நீஆது., சிறப்புதிட்ட உபகோட்டம் எண்:2, மூலைக்கரைப்பட்டிக்கு திரு.மா.கணேஷ் முருகன், இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெறப்பட்டமைக்கு ஏற்பளிப்பு வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

26/11/24

செயற்பொறியாளர், நீ.வ.து.,
சிறப்பு திட்டக் கோட்டம்,
அம்பாசமுத்திரம்.

26/11/24